கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 05.12.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மக்காச்சோளத்திற்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, மக்காச்சோளத்திற்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

இந்தியா 2023-24 ஆம் ஆண்டில் 10 மில்லியன் எக்டர் பரப்பளவில் 34 மில்லியன் டன் மக்காச்சோளத்தை உற்பத்தி செய்துள்ளது. இதன் உற்பத்தித் திறன் எக்டருக்கு 3.43 டன்களாகும். கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம், ராஜஸ்தான் மற்றும் பீகார் ஆகியவை மக்காச்சோளம் உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும். 2023-24 ஆம் ஆண்டில் இந்தியா 0.50 மில்லியன் டன் மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்துள்ளது. இந்தியாவிலிருந்து மக்காச் சோளமானது நேபாளம், பங்களாதேஷ், மியான்மர், பாகிஸ்தான் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழகத்தில் 2022-23 ஆம் ஆண்டில் 0.4 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 2.99 மில்லியன் டன்கள் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சேலம், திண்டுக்கல், நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் மக்காச்சோளம் அதிகம் விளைகிறது.

அறிக்கைகளின்படி, உள்நாட்டு மக்காச்சோளத்தின் விலை உயர்வு உலக சந்தையில் இந்திய மக்காச்சோளத்தின் போட்டித் தன்மையைக் குறைத்துள்ளது. அமெரிக்காவின் விவசாய துறை அறிக்கையின்படி, 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவில் மக்காச்சோளத்தின் இருப்பு மற்றும் உள்நாட்டு நுகர்வு முறையே 2.2 மில்லியன் டன்கள் மற்றும் 31.2 மில்லியன் டன்கள் ஆகும்.

விலை முன்னறிவிப்பு திட்டமானது, கடந்த 27 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நிலவிய மக்காச்சோளம் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், தரமான மக்காச்சோளத்தின் பண்ணை விலையானது அறுவடையின் போது (டிசம்பர்'23) குவிண்டாலுக்கு ரூ.2200 முதல் ரூ.2300 ஆக இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய ஆலோசனையின்படி அடிப்படையில் சந்தை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி-0422-2431405

இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்
நீர் தொழில் நுட்ப மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி-0422-2431405


**தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
சிறு தானிய துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி-0422-2450507


*மக்கள் தொடர்பு அலுவலர்*